கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.14/2024

பி வா.சா.– 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. ராஜேந்திரன்** | தொழில் | |
| த/ பெயர் | **குமாரநாயக்கர்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 04.06.2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் எனது பிரமாண பத்திர வாக்குமூல பத்திரம் தாக்கல் செய்ய்யப்பட்டு பின்வருமாறு கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| **வ.எண்** | **தேதி** | **ஆவணங்கள் விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.15 | –– | எனது ஆதார் கார்டு | நகல் |
| பி.வா.சா.ஆ.16 | –– | என் பெயரிலும் என் அப்பா பெயரில் உள்ள சொத்தின் பட்டா | கணிணி பதிவிறக்க நகல் |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதிகளும் 1 ம் பிரதிவாதிகளும் சகோதரிகள் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். கச்சமநாயக்கர் மகன்தான் எல்லப்ப நாயக்கர் என்றால் சரிதான். எல்லப்ப நாயக்கரின் மக்கள்தான் வாதிகளும், 1 ம் பிரதிவாதியும் என்றால் சரிதான். கச்சமநாயக்கர் 28.05.2007 ல் இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. கச்சமநாயக்கரும் அவரது மகன் எல்லப்பநாயக்கரும் 07.06.1999 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் தேதி தெரியாது, 1999 என்றால் சரிதான். கச்சமநாயக்கர் பாகப்பிரிவினை செய்த அன்றே அமராவதிக்கு 1 ம் இலக்க சொத்தை தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய நாளன்றே வாதிகளுக்கு அது குறித்து தெரியும் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தை நான் படித்து பார்த்தேன் என்றால் பார்த்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் கச்சமநாயக்கர் மகள்களுக்கு

பாகம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் எல்லப்பநாயக்கரும், பெருமாள்சாமியும் 28.08.2000 ம் வருடத்தில் பரிவர்த்தனை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் தெரியும். அதில் 82 சென்ட்டை பெருமாள் சாமியிடம் கொடுத்து விட்டு 7,8,9 இலக்க சொத்துக்களை எல்லப்பநாயக்கர் பெற்றுக் கொண்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அமராவதியின் கணவர்தான் சின்னச்சாமி என்றால் சரிதான். சின்னச்சாமிக்கு 2 முதல் 5, 7,8 சொத்துக்களை எல்லப்பநாயக்கர் கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த கிரையத்தில் வாதிகளுக்கு பாகம் கொடுத்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு எந்த ஏற்பாடும் செய்யாமல் பாகப்பிரிவினை பத்திரம் , தான செட்டில்மெண்ட் பத்திரம் போன்றவற்றை செய்தது தவறு என்றால் வாதிகளின் கணவர் சின்னச்சாமிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார். கிரையப்பத்திரம், தானசெட்டில்மெண்ட் செல்லாது என்பதால் 1 முதல் 10 இலக்க சொத்துக்களுக்கு வாதிகள் பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கூட்டுக் குடும்ப அனுபவத்தில் மேற்கண்ட இலக்க சொத்துக்களில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் எந்த தேதியிலிருந்து தாவா சொத்துக்களில் இருந்து விலகினார்கள் என்றால் 1999 க்கு பிறகு அவர்கள் இருந்ததாக தெரியவில்லை. வாதிகளுக்குரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அமராவதிக்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.04 19:19:23 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.